**செய்தி வெளியீடு எண்: 026** **நாள்:09.05.2021**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக முழு ஊரடங்கு 10.05.2021 காலை 4.00 மணி முதல் 24.05.2021 காலை 4.00 மணி வரை அமல்படுத்தப்பட்ட நிலையில் தனியார் பேருந்துகள், ஆம்னி பேருந்துகள் சொந்த ஊர் திரும்பும் பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிக்க கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் அறிவுறுத்தியுள்ளர்.

அதன் அடிப்படையில் இந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்தும் வகையில் 08.05.2021 காலை 11.30 மணி முதல் 10.05.2021 காலை 8.00 மணி வரை கூடுதல் தலைமைச் செயலாளர் போக்குவரத்து ஆணையர் திரு.தென்காசி சு ஜவஹர் இ.ஆ.ப அவர்களது தலைமையில் மாநிலத்தின் முக்கிய சாலைகளில் பல்வேறு குழுக்களாக இணைப் போக்குவரத்து ஆணையர்கள், துணை போக்குவரத்து ஆணையர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தனியார் பேருந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகளை ஆய்வு செய்தனர்.

ஆய்வில் இந்த பேரிடர் காலத்தில் சேவை மனப்பான்மையோடு செயல்படாமல் பொதுமக்களை வருத்தும் வகையில் அதிக கட்டணம் வசூலித்த வாகனங்களின் மீது அனுமதி சீட்டு நிபந்தனைகளை மீறிய குற்றத்திற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்:–

- 304 ஆம்னி பேருந்துகள் மீது அபராதம் விதிக்கப்பட்டது.
- இதன் மூலம் அபராதமாக ரூபாய் பத்து லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூறு (ரூ.10,92,600/–) வசூலிக்கப்ட்டது.
- அபராத வரியாக ரூபாய். இருபத்து ஏழு லட்சத்து இருபதாயிரத்து இருநூற்றி தொண்ணூறு (ரூ.27,20,290/–) வசூலிக்கப்பட்டது.
- 25 ஆம்னி பேருந்துகள் சிறை பிடிக்கப்பட்டது.

ஆக மொத்தம் அபராதக் கட்டணம் மற்றும் அபராத வரியாக அரசுக்கு மொத்தமாக ரூ.38,12,890/– வசூல் செய்யப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**